யுனிசெப்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நிலையம்

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

# நடைமுறையில் சமவாயம்

உலக சமுதாயம் தனது பிள்ளைச் செல்வங்களுக்கு எதையெல்லாம் ஆசிக்கிறதென்பதை மிகத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கும் ஒரேயொரு சர்வதேச மனித உரிமைச் சட்டமாக சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் விளங்குகிறது. அதன் 54 உறுப்புரைகளும் தனித்துவமான உரிமைகளின் கோவையாக சமூக, பொருளாதார, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் யாவற்றையும் உள்ளடக்கிய ஒரே சாசனமாக விளங்குகிறது.

சிறுவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் சமூக வாழ்க்கையாலும் தமது ஆற்றலுக்கேற்றவாறு வளர்ச்சி பெறவும் தமது கருத்துகளைச் சுதந்திரமாகத் தெரிவிக்கவும் உரிமையுடைய தனிப்பிறவிகள் என்பதைச் சமவாயம் ஏற்றுக்கொள்கிறது. இதற்கும் மேலாக, மனித சமுதாயாத்தின் உய்வு, ஆரோக்கியம், மேம்பாடு ஆகியவற்றை நெறிப்படுத்தும் முன்மாதிரியாகவும் இச் சமவாயம் திகழ்கிறது. அடுத்த தலைமுறையினரின் வாழ்க்கை எந்த அளவுக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறதென்பதைப் பொறுத்தே ஒரு நாட்டின் எதிர்காலம் அமையும் என்னும் உண்மையை அது பறைசாற்றுகிறது.

1989 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்பது மாத காலத்துள் சமவாயம் நடைமுறைக்கு வந்தது. மற்றெந்த மனித உரிமைச் சாசனமும் இவ்வளவு துரித கதியில் சர்வதேச சமுதாயத்தின் வரவேற்பைப் பெற்றதில்லை. 1997 மார்ச் வரையில் 191 நாடுகள் அதனை ஏற்று உறுதிப்படுத்தியிருந்தன. ஐக்கிய அமெரிக்கா, சோமாலியா என்பனவும் இதனை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் முழு உலகும் இதனை அங்கீகரித்ததாக அமையும்.

## அமுலாக்கம் பற்றிய அறிக்கை

சமவாயத்தை உறுதிப்படுத்தும் ஒவ்வொரு நாடும் சமவாயத்தின் இலக்குகளை நிறைவேற்றும் பொருட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி இரண்டு வருடத்துள் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். இத்தேசிய அறிக்கைகளை சிறுவர் உரிமைகள் செயற்குழு ஆராயும். இக்குழுவில் 10 நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நிபுணர்கள் அங்கம் வகிக்கிறார்கள். இக் குழு சிறுவர் உரிமைகள் பாரதூரமான முறையில் மீறப்படுவது தொடர்பான அறிக்கைகளை அவசரமாக ஆராய்வதற்கான நடைமுறை ஒன்றினை வகுத்துள்ளது. இது தவிர, செயற்குழு நாடுகளுக்கு விஜயம் செய்து நேரடியாகவும் தகவல்களைத் திரட்டுகிறது.

குடியுரிமைகள், சுதந்திரங்கள், குடும்பச் சூழல் மாற்றுப் பராமரிப்பு அடிப்படைச் சுகாதாரம் சேமநலன், கல்வி, ஒய்வு, கலாசார நடவடிக்கைகள் சிறுவருக்கான விசேட பாதுகாப்பு ஆகியவை தொடர்பான பொதுக் கோட்பாடுகள் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றன எனத் தேசிய அறிக்கைகள் விளக்குதல் வேண்டும்.

சமவாயத்தின் உறுப்புரைகளைப் பின்பற்றுவதில் தாம் அடைந்த முன்னேற்றம் பற்றி மட்டுமல்லாமல், எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளையும் அறிக்கையில் குறிப்பிடுமாறு தேசங்கள் தூண்டப்படுகின்றன. இளைஞர் அடங்கலாக எல்லாப் பிரசைகளும் சமவாயத்தின் உறுப்புரைகளைப் அறியச் செய்வதும் தேசிய அறிக்கைகளைத் தயாரிக்கும் போது பிரச்சினைக்குரிய விடயங்களை இனங்கண்டு அவை தொடர்பான தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பைப் பெறச்செய்வதும் சம்பந்தப்பட்ட

நாடுகள் உறுதிப்படுத்த வேண்டிய விடயங்களாகும். செயற்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வோர் அறிக்கையும் சம்பந்தப்பட்ட நாட்டின் பிரதிநிதிகள் முன்னிலையில் பகிரங்கமாக ஆராயப்படும்.

பகிரங்க விசாரணைக்கு முன்னர், செயற்குழு, அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் முகவர் நிலையங்களுடனும், அக்கறையுடைய ஏனையோருடனும் பகிர்ந்துகொள்ளும். அத்துடன், செயற்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் யுனிசெப், சர்வதேச தொழில் நிறுவனம் (ILO), உலக சுகாதார தாபனம் (WHO), அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய பூர்வாங்கக் கூட்டமொன்றும் ஒரு வார காலத்துக்கு நடைபெறும். ஒவ்வொரு அறிக்கையும் எந்தளவுக்குச் சரியானதென ஆராயப்படும். இனங்காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான நடைமுறைச் சாத்தியமான வழிவகைகளும் கவனத்திற் கொள்ளப்படும்.

பூர்வாங்கக் கூட்டத்தின் முடிவில், செயற்குழுவில் ஆராயப்பட வேண்டிய பிரச்சினைகள் அடங்கிய அட்டவணையொன்று சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் பகிரங்கக் கூட்டத்தில் கேள்விகளுக்கு விடையளிக்கும் பொருட்டு பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறும் அழைப்பு விடுக்கப்படும்.

## குறிப்பிட்ட விடயங்கள் பற்றி ஆக்கபூர்வமான விவாதம்

1993 மே மாதம் முதல் நாடுகள் தமது அறிக்கைகளை அனுப்பத் தொடங்கின.

அறிக்கைகளை ஆராய்வதில் பல்வேறு கோட்பாடுகள் செயற்குழுவுக்குக் கைகொடுக்கின்றன. "அரசியல் அடிப்படையிலான சங்கற்பம் உண்டா, வரவு செலவுத் திட்டங்களில் சிறுவர்களின் தேவைகள் இடம்பெற்றிருக்கின்றனவா, அரசாங்கத்தினதும் அதன் தலைவர்களினதும் கூற்றுக்களில் சமவாயம் முன்னுரிமை பெறுகிறதா, நிர்வாகக் கட்டுக்கோப்புகள் சிறுவர்களுக்கு நலன் தரும் வகையில் உருவாக்கப் பட்டுள்ளனவா என்பன போன்றவற்றை ஆராய முயல்கிறோம்" என்று செயற்குழு உறுப்பினர் தோமஸ் ஹம்மர்பேர்க் (சுவீடன்) குறிப்பிடுகிறார். முதல் ஆறு அறிக்கைகளையும் சமர்ப்பித்த நாடுகளுடன் நடத்திய கூட்டங்களும் கருத்துப் பரிமாற்றங்களும் நேர்மையானவையாகவும் சுய - கண்டிப்பு உடையனவாகவும் அமைந்தன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"உண்மைகளை மறைப்பதனால் அரசாங்கங்கள் பயனடையமாட்டா. ஐக்கிய நாடுகள் முகவர் நிலையங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் எமக்கிருக்கும் தொடர்புகள் மூலமாக உண்மை நிலைமையை நாம் அறிந்து கொள்வோம். ஆரம்பத்திலிருந்தே எல்லா விடயங்களையும் ஒளிவு மறைவில்லாமல் தெரிவித்து பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முயல்வதே 'நல்லது" என்றும் அவர் கூறியுள்ளார். அரசாங்கங்கள் மீது குற்றம் சுமத்துவது செயற்குழுவின் நோக்கமன்று. சிலசமயம் கூட்டங்களில் வெளியாகும் பிரச்சினைகள் சில அரசாங்கப் பிரதிநிதிகளுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தாலும் கலந்துரையாடலின் தொனி ஆக்கபூர்வமானதாகவே இருந்தது.

பகிரங்கக் கூட்டத்தின் பின்னர், ஒவ்வொரு நாட்டின் அறிக்கை தொடர்பாகவும் செயற்குழு அவதானித்த அம்சங்கள் பற்றிய சுருக்கமான குறிப்பு வழங்கப்படும். இதில் அந்தந்த நாடுகள் எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள், அக்கறைக்குரிய விடயங்கள், இடர்ப்பாடுகள், விதந்துரைகள் என்பன குறிப்பிடப்படும். தேசிய

பாராளுமன்றங்களும், ஊடகங்களும், இவ்விடயங்கள் பற்றிய வாதப்பிரதிவாதங்களை எழுப்பத் தூண்டு முகமாகவே இக்குறிப்பு வழங்கப்படுகின்றது.

உதாரணமாக ஒருமுறை வியட்நாமின் அறிக்கை பற்றிய குறிப்புரையில் சிறுவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி ஆதியன தொடர்பாக அந்நாட்டில் இயற்றப்பட்ட சட்டங்களையும் நாட்டின் புதிய யாப்பில் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பாகச் சேர்க்கப்பட்டிருக்கும் வரையறைகளையும் செயற்குழு பாராட்டியது, ஆயினும், சிறுவர்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் ( இதில் சிறுபான்மையினரால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களும் அடங்கும்), தெருவோரங்களில் வாழ்ந்து பிழைக்கும் சிறுவர்கள் ஆகியோர் பற்றிய தனது கவலையைத் தெரிவித்து இவர்களின் தேவைகளுக்கு முக்கிய கவனம் செலுத்துமாறும் குழு வலியுறுத்தியது. குற்றச் செயல்கள் தொடர்பாகப் பழிசுமத்தப்பட்ட சிறுவர்களுக்கு சமவாயத்தின் 40வது உறுப்புரை வழங்கும் பாதுகாப்புகள் அனைத்தும் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது.

சுவீடன் நாட்டின் சட்டம், சமவாயத்தின் 2ஆம் உறுப்புரையில் குறிப்பிட்டிருக்கும் பாகுபாடுகளுக்கு எதிரான பாதுகாப்பை வழங்குவதில்லை. தடுப்புக் காவலில் வைக்கப்படும் சிறுவர்கள் வயதுவந்தவர்களிடமிருந்து பிரித்து வைக்கப்படுவதுமில்லை. சுவீடனின் அறிக்கை பற்றிய குறிப்புரையில் செயற்குழு இந்த அம்சம் பற்றிய தனது கவலையைத் தெரிவித்தது. அறிக்கையின் ஆக்கபூர்வமான அம்சங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், சமவாயத்தின் உறுப்புரைகளைப் பிரதிபலிக்கும் பாங்கில் சுவீடன் இயற்றிய சட்டங்களும் சமவாயத்தைப் பிரசித்தப்படுத்துமுகமாக மேற்கொண்ட நடவடிக்கைகளும் சுட்டிக்காட்டப்பட்டன. உலகளாவிய விதத்தில் சிறுவர்களின் நிலையை மேம்படுத்தும் பொருட்டு வழங்கிவரும் கணிசமான உதவிக்காகவும் சுவீடனைச் செயற்குழு பாராட்டியது.

## சமவாயத்துக்கு உயிர்கொடுக்கும் விதம்

சிறுவர் பிரச்சினைகள் தொடர்பாகப் புதியதொரு சட்டப் பரிமாணத்தைச் சமவாயம் அளிக்கிறது. இது விடயத்தில் பல நாடுகள் நடவடிக்கை எடுத்துள்ளன. இவற்றில் சட்ட வாரியான பாதுகாப்புகளும் அமைப்புகளும் முக்கியமானவை. பல தேசங்கள் தமது சட்டங்களைச் சமவாயத்துக்கு இசைவாக மீளாய்வு செய்துள்ளன. உதாரணமாக, நமீபியாவில் சிறுவர் உரிமைகள் பற்றிய எண்ணக் கரு புதிய யாப்பில் பட்டவர்த்தனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பல நாடுகள் சிறுவர்களின் உரிமைகளைக் கண்காணிப்பதற் கான ஒரு நிறுவனத்தை அல்லது அமைப்பை உருவாக்க உடன்பட்டிருக்கின்றன. இது கோஸ்டாரிகாவிலும், நோர்வேயிலும் உள்ளதைப்போலச் சிறுவர்க்கான தனிமனித பஞ்சாயமாக அல்லது எகிப்தில் உள்ளதைப்போல தேசிய செயற்குழு அல்லது ஆணைக்குழுவாக அமையலாம்.

சமவாயத்தை உறுதிப்படுத்திய எட்டாவது நாடு பொலிவியா. அரசாங்கத்தின் கொள்கைகளும் சட்டவாக்கங்களும் சமவாயத்தின் உறுப்புரைகளுக்கு இசையத்தக்க நடவடிக்கைகளை அந்நாடு துரிதமாதக மேற்கொண்டது. சிறுவர்கள், பெண்கள் ஆகியோரிடையே நிலவும் வறுமையை ஒழிப்பதற்கான 10 ஆண்டுச் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பாலியக் குற்றங்கள் தொடர்பான சட்டக்கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

சமவாயம் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கையிலேயே, பிரேஸில் அதற்குச் சாதகமாகச் செயற்பட முன்வந்தது. தொலைக்காட்சி, வானொலி, அச்சு ஊடகங்கள் ஆதியன 18 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான நேரத்தையும் இடத்தையும் பிரசாரச் செய்திகளைப் பரப்பும் பொருட்டு கொடுத்துதவ முன்வந்தன. சிறுவர் உரிமை இயக்கத்துக்கு ஊனும் உரமும் அளிக்க இது உதவிற்று. 1990 இல் சிறுவர்கள் இளைஞர்கள் ஆகியோரின் உரிமைகள் பற்றிய உறுப்புரையுடன் முழுமை பெற்ற புதியதொரு தேசிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது.

1992 இல் தென் ஆபிரிக்காவில் சிறுவர் உச்சி மாநாடு ஒன்று நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சிறுவர்கள் கேப் டவுன் நகருக்கு வந்து அந்நாட்டின் புதிய அரசியல் யாப்பில் சேர்த்துக்கொள்வதற்கான சிறுவர் உரிமைச் சாசனம் ஒன்றை வரைவதற்கு உதவினர்.

பிரிட்டனில் சமவாயத்தின் செயற்பாட்டைத் தூண்டும் பொருட்டு சிறுவர் உரிமை மேம்பாட்டு நிலையம் என்னும் பெயரில் சுதந்திரமான, இலாப நோக்கற்ற அமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையம் சிறுவர்கள் சம்பந்தமாகச் செம்மைசான்ற கொள்கைகளை வகுப்பதற்கு அவசியமான முன்னுரிமைகளை இனங்காணும் பொருட்டு, நிறுவனங்கள், சிறுவர்கள், வயது வந்தவர்கள் ஆகியோருடன் இணைந்து செயலாற்றுகிறது.

## சமவாயம் பற்றிய அறிவைப் பரப்புதலும் நிதி சேர்த்தலும்

பிரதான பிரச்சினைகள் சம்பந்தமான அறிவை உலகளாவிய மட்டத்தில் பரப்புவதில் சிறுவர் உரிமைச் செயற்குழு அக்கறை கொண்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளில் சிறுவர் தொழில் புரிதல், அகதிச் சிறுவர் மற்றும் ஆயுதப் பிணக்குகளில் சிக்கிய சிறுவர்களின் தேவைகள் என்பனவும் அடங்கும். 45 (ஆ) உறுப்புரை, சமவாயத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வறிய நாடுகளுக்குத் தேவைப்படும் தொழில்நுட்பம் மற்றும் உதவிகள் பற்றிக் குறிப்பிடுகிறது. இது விடயமாகவும் சிறுவர் உரிமைச் செயற்குழு நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகளை எதிர்பார்த்து வந்துள்ளது.

“பொருளாதார வாய்ப்புகள் குன்றிய நாடுகள் செல்வந்த நாடுகளிடமும் சர்வதேச சமூகத்திடமும் ஆதரவைப் பெறும் என்ற நம்பிக்கை இல்லாதிருந்தால் இந்தச் சமவாயம் தென்திசை நாடுகளின் ஒப்புதலையோ தாபரத்தையோ பெற்றிருக்கமாட்டாது என்பதை மறத்தலாகாது” என்றார் ஹம்மர்பேர்க் அவர்கள். “தமது சிறுவர்கள்பால் அதிக அக்கறை கொள்ள வேண்டுமென்ற ஆர்வம், வறிய நாடுகளுக்கு இருந்த போதிலும் பொருள் வளக்குறைவின் காரணமாக அந்த ஆர்வத்தைச் செயற்படுத்தும் வாய்ப்புக் கிடைக்கவில்லை” என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.